# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 1380-2024

Deposition of Witness for D.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சுப்புலட்சுமி | **தாலுகா** | : | திருவேங்கடம் |
| **க.பெ.** | : | சதுரகிரி | **தொழில்** | : | மேற்பார்வையாளர் |
| **ஊர்** | : | திருவேங்கடம் | **வயது** | : | 40 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 12.02.2026.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் விருதுநகர் விற்பனைக் கூடம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், வத்திராயிருப்பு மேற்பார்வையாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. என் பணி சந்தைக் கட்டணம் வசூலிப்பது ஆகும். எங்கள் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் விலை பொருட்கள் 16 வகைகள் விற்பனை செய்யும் முன், அந்த பொருளின் மதிப்பில் 1 சதவீதம் அரசிற்கு சந்தைக் கட்டணம் செலுத்தவேண்டும். அந்த பணியை நான் செய்கிறேன். அந்த 16 வகை விலைப் பொருளில் நெல் வரும். எங்கள் அலுவலக வரம்பிற்குள் மகாராஜபுரம் கிராமம் மற்றும் பிலாவாக்கல் கிராமம் வரும். அந்த கிராமங்களில் நெல்லை விற்பனை செய்யும்போது நெல் வாங்கும் வியாபாரிகளிடம் இருந்து வசூல் செய்வோம். அவ்வாறு சந்தைக்கட்டணம் செலுத்தாமல் நெல்லை எடுத்து செல்ல முடியாது. அவ்வாறு எடுத்துச் சென்றால் சோதனை சாவடியில் அதனை பிடித்து சந்தைக் கட்டணம் மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

அவ்வாறு செலுத்தப்படும் சந்தைக் கட்டணத்திற்கு இரசீது வழங்கவோம், அவ்வாறு விலை பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி சீட்டு வழங்குவோம். அந்த சந்தைக் கட்டணம் வசூல் குறித்து பதிவேடு பராமரிப்போம். நான் எங்கள் அலுவலகத்தில் 01.10.2024 முதல் 26.10.2024 வரைக்கான பதிவேடு நகல் தாக்கல் செய்கிறேன். அசல் பதிவேடு எடுத்து வந்துள்ளேன். அது **சா.சா.ஆ. 1** ஆகும். 01.10.2024 முதல் 26.10.2024 வரை இராஜேந்திரன் என்பவர் எங்கள் அலுவலக எல்லைக்குள் நெல் கொள்முதல் செய்ததாகவோ எங்கள் அலுவலக சந்தைக்கட்டணம் செலுத்தியதாவோ பதிவு ஏதும் இல்லை. நெல் கொள்முதல் செய்வது சம்மந்தமாக ஒரு லோடுமேன் சங்கம் உள்ளது என்றால் உள்ளது. எங்களுக்கும் அவற்றிற்கும் சம்மந்தம் இல்லை.

C. Subbu 12.02.26

மேற்பார்வையாளர்
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்
வத்திராயிருப்பு

**குறுக்கு விசாரணை :**

நீதிமன்ற அழைப்பாணையில் நெல் சம்மந்தமாக பதியப்பட்ட ஆவணம் எடுத்துவர குறிப்பிடப்பட்டு இருந்தது. நான் வத்திராயிருப்பு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தி் 01.11.2022 அன்று பணியில் சேர்ந்தேன். என்னுடைய மேற்பார்வையாளர் பணிகள் என வரையறுக்கப்பட்டுள்ளது. விதிமுறைகள் உள்ளது. அந்த விதிகளில் மகாராஜபுரம் மற்றும் தம்பிபட்டி கிராம நெல் கொள்முதல் சம்மந்தமாக பார்க்க குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் அலுவலக பணிநேரம் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை ஆகும். நான் என்னுடைய பணிக்கு வருவதற்கு அலுவலக வருகை பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரி. என் அலுவலகத்தில் மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை 4. 01.10.2024 அன்று எங்கள் அலுவலகத்தில் 4 பணியாளர்கள். இருவர் பணியில் இருந்தோம். இருவர் பணியில் இல்லை. அந்த தேதியில் மகாராஜபுரம் தம்பிபட்டி கிராம நெல் கொள்முதல் சம்மந்தமாக பதிவேடுகளில் எழுதியது நான் மற்றும் அங்கிருந்த இளநிலை உதவியாளராக இருக்கும்.

மகாராஜபுரம் தம்பிபட்டி கிராமங்களில் நெல் விளைச்சல் குறித்து நெல் விளைச்சல் எங்கள் அலுவலகத்தில்தான் விற்பனை செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விவசாயி அவர் உற்பத்தி செய்யும் நெல்லை கையிருப்பில் வைத்துக் கொள்ளலாம் என்றாலும் வெளி நபர்களுக்கு விற்பனை செய்யலாம் என்றாலும் எங்கள் அலுவலகத்தில் விற்பனை செய்யலாம் என்றாலும் சரி. விவசாயி அவர் உற்பத்தி செய்யும் நெல்லில் எவ்வளவு கையிருப்பு வைத்திருக்கிறார் என்றும் வெளி நபர்களுக்கு எவ்வளவு நெல் விற்பனை செய்துள்ளார் என்றும் எங்கள் அலுவலகத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்ற விதி ஏதும் இல்லை. பொதுவாக ஒரு ஏக்கருக்கு எவ்வளவு நெல் உற்பத்தி செய்வார்கள் என்றால் 25 முதல் 30 மூடைகள் வரை மகாராஜபுரம் தம்பிபட்டி கிராமங்களில் விளைவிப்பார்கள். 4 ஏக்கர் நிலத்தில் 120 மூடைகள் வரை தோராயமாக நெல் உற்பத்தி வரும் என்றால் சரி.

சா.சா.ஆ.1 பதிவேடு வணிக அந்த பகுதியில் விளையும் நெல்லை அந்த பகுதிக்கு வெளியே எடுத்துச் செல்ல அரசிற்கு சந்தைக் கட்டணம் செலுத்தி அனுமதி சீட்டு பெறவேண்டும் அதற்காக அந்த பதிவேடு பராமரிக்கப்படுகிறது. விவசாயி எங்களிடம் அனுமதி சீட்டு பெற்று வணிகருக்கு நெல் விற்பனை செய்யவேண்டும் என்ற விதிமுறைகள் இல்லை என்றால் சரி. வியாபாரி ஒரு குறிப்பிட்ட பகுதியில் நெல் கொள்முதல் செய்ய வேண்டி எங்களிடம் அனுமதி கேட்டால் நாங்கள் அனுமதி வழங்குவோம். வியாபாரி அவ்வாறு அனுமதி சீட்டு பெறாமலும் நெல் கொள்முதல் செய்ய முடியும் என்றால் அனுமதி சீட்டு அவசியம் பெறவேண்டும். அவ்வாறு பெறவில்லை என்றால் சோதனை சாவடியில் சந்தைக் கட்டணம் மற்றும் அபராதம் செலுத்தவேண்டும். அவ்வாறு அனுமதிசீட்டு பெறாமலும் சோதனை சாவடியில் அபராதம் செலுத்தாமலும் நெல்

C Subbu 12.02.26

மேற்பார்வையாளர்
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்
வத்திராயிருப்பு

கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளது என்றால் எங்கள் கவனத்திற்கு வராமல் நடைபெற்றிருக்கலாம்.

சா.சா.ஆ.1 பதிவேடு அரசால் அறிவிக்கப்பட்ட 16 வகை பயிர்களுக்கான அனுமதிக் கடிதம் குறித்த பதிவேடு ஆகும். சா.சா.ஆ.1 பதிவேட்டில் (பக்கம் 91) 6 வது அட்டவணையில் தேங்காய் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சா.ஆ.1 பதிவேட்டில் நெல் குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் அக்டோபர் மாதத்தில் குறிப்பிடவில்லை. அதன் பிற்பாடு டிசம்பர் முதல் பிப்ரவரி வரை மற்றும் மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை வத்திராயிருப்பு பகுதியில் நெல் உற்பத்திக்கான அறுவடை காலம் ஆகும். அவ்வாறு அறுவடை காலத்திற்கு பின்னும் விவசாயிடம் இருக்கும் நெல்லை வியாபாரி விற்பனை செய்ய அனுமதி கேட்டால் அனுமதி வழங்குவோம். சா.சா.ஆ.1 பதிவேடு தவிர வேறு எங்கள் அலுவலகத்தில் சந்தைக் கட்டணத்திற்கான இரசீது புத்தகம் மற்றும் தினசரி வசூல் அறிக்கை பதிவேடு பராமரிப்போம். எங்கள் அலுவலகத்தில் மகாராஜபுரம் தம்பிபட்டி கிராமங்களில் யார் யார் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது என்ற ஆவணம் பராமரிக்கிறோமா என்றால் இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/2/26

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.

12-02-26
மேற்பார்வையாளர்
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்
வத்திராயிருப்பு